## செய்தி வெளியீடு

### தமிழ்நாடு சிட்கோவில் நடப்பு ஆண்டில் நிறைவேற்ற வேண்டிய ரூ.319.41 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டும்.

### சிட்கோ ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் உத்தரவு.

----------------

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் இன்று (11.5.2023) சென்னை, கிண்டியில், தமிழ்நாடு சிட்கோவால் நிறைவேற்றப்படும் திட்டங்கள் குறித்த ஆய்வு கூட்டத்தில் பேசியதாவது–

"பொது வசதி மைய திட்டத்தின் கீழ் ரூ.101.19 கோடி மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் முடிக்கப்பட வேண்டிய பின்னலாடை குழுமம்–திருப்பூர், மரச்சாமான்கள் குழுமம்–சேலம், ஆடை குழுமம்–திருப்பூர், அச்சு மற்றும் பேக்கிங் குழுமம்–ஒசூர் இயந்திர கட்டுமான பணிகள் குழுமம் – பெரம்பலூர், நெசவு குழுமம்–ஈரோடு, கம்பளி ஆடை குழுமம்–நீலகிரி, தங்க நகை குழுமம்–திருநெல்வேலி ஆகிய 8 திட்டங்கள் நடப்பு ஆண்டிற்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டத்தின் கீழ் ரூ.218.22 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்ட திருச்சி மாவட்டம் – மணப்பாறை, திருவள்ளூர் மாவட்டம் – காவேரிராஜபுரம், செங்கல்பட்டு மாவட்டம் – கொடூர், மதுரை மாவட்டம் – சக்கிமங்கலம் ஆகியவற்றில் மனைகள் மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றுக்கான அரசுத் துறை அனுமதிகளை விரைந்து பெற்று, ஒரு மாத காலத்திற்குள் திறந்து வைக்கப்பட வேண்டும்.

தனியார் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 17.57 கோடி மதிப்பீட்டில் புதிதாக அறிவிக்கப்பட்ட கோயம்புத்தூர் மாவட்டம் – பேறிஞர் அண்ணா தொழிற்கூட்டுறவு தொழிற்பேட்டை, ரூ. 18.13 கோடி மதிப்பீட்டில் கோசிமா தொழிற்பேட்டை ஆகியவற்றின் சிறப்பு நோக்கு ஊர்தி குழுக்களை தொடர்ந்து சந்தித்து, அவர்களின் பங்களிப்பு தொகையை பெற்று பணிகளை விரைந்து முடிக்க உரிய அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பொது உற்பத்தி மைய திட்டத்தின் கீழ் ரூ. 12.81 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் கோயம்புத்தூர் மாவட்டம் – வெள்ளலூர் வார்ப்பு குழுமம், மதுக்கரை பொறியியல் குழுமம், வேலூர் மாவட்டம், குடியாத்தம் தீப்பெட்டி குழுமம் ஆகியவற்றில் நடைபெற்று வரும் கட்டிட பணிகள் தரத்துடன் அமைய வேண்டும். இதற்கான இயந்திரங்கள் கொள்முதல்களை உரிய காலத்திற்குள் பெற்று நிறுவ வேண்டும்.

பெருங்குழும திட்டத்தின் கீழ் ரூ. 47.61 கோடி மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் – திருமுடிவாக்கம் – துல்லிய உற்பத்தி குழுமம், மாண்புமிகு முதல்வர் அவர்களால் ரூ. 155 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டப்பட்ட விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் – மருந்தியல் குழுமம் மற்றும் அம்பத்தூர், கோயம்புத்தூர் தொழிற்பேட்டைகளில் ரூ.51.47 கோடி மதிப்பீட்டில் 1,310 தொழிலாளர்கள் தங்கும் விடுதிகள் கட்டும் பணிகள் ஆகிய பணிகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்பாகவே முடிக்கும் வகையில் அலுவலர்கள் முனைப்புடன் செயலாற்ற வேண்டும்.

2022–23 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களான கடலூர் மாவட்டம், கடாம்புலியூர், தூத்துக்குடி மாவட்டம்–லிங்கம்பட்டி, கடலூர் மாவட்டம், மதவேடு தனியார் தொழிற்பேட்டையும், ஆகிய தொழிற்பேட்டைகளுக்கான நிலமெடுப்பு பணிகள் நிறைவுற்ற நிலையில், மனை மேம்பாட்டு பணிகளை தொடங்க வேண்டும்.

விருதுநகர்–ஆயத்த ஆடை மகளிர் நெசவு குழுமம், கோயம்புத்தூர் மாவட்டம்–சின்னவேடம்பட்டி அலுமினிய அச்சு குழுமம், விருத்தாசலம் – பீங்கான் மின்காப்பு உபகரண குறு குழுமம், ஈரோடு–மஞ்சள் தூள் உற்பத்தி குறு குழுமம், பவானி–ஜமக்காள உற்பத்தி குறு குழுமம் ஆகியவற்றிற்கான பொது வசதி மையங்கள் அமைப்பதற்கான ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ள நிலையில் உடனடியாக இப்பணிகளை துவங்கி முடிக்க வேண்டும்.

சிட்கோ தொழிற்பேட்டையின் கிளை மேலாளர்கள், மனை தொகை, வாடகை, பராமரிப்பு கட்டணம் ஆகியவற்றில் நிலுவை தொகை அதிகம் உள்ளது. அதனை விரைந்து வசூலிக்க வேண்டும். தொழிற்பேட்டைகளை சுத்தமாகவும், முறையாகவும் பராமரிக்க வேண்டும். தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் நலச் சங்கங்களை அமைத்து, அவர்கள் மூலமாக பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தெரிவித்தார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் திரு. வி.அருண்ராய், இ.ஆ.ப. சிட்கோ, மேலாண்மை இயக்குநர் திருமதி சோ. மதுமதி, இ.ஆ.ப., சிட்கோ பொது மேலாளர் திருமதி.ரேகா, கண்காணிப்பு பொறியாளர் மற்றும் கிளை மேலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in